10. கீழ்கானும் ஒவ்வொண்றுக்கும் மதிப்பெண்கள் உண்டு என்பதை நான் அறிவேன்.
    I. Exam
    II. Home Work
    III. Attendance
    IV. Project Work/Thesis
11. விண்ணப்பப்படிவத்தில் கொடுக்கப்பட்ட அனைத்தும் உண்மையானது, எனது சொந்த அறிவினால் கொடுக்கப்பட்டது.
12. மேற்கண்ட உறுதிமொழிகளில் ஒன்றையாவது மீறுகின்ற பட்சத்தில் நான் தொடர்ந்து பங்கெடுக்க இயலாது என்பதை நன்கு அறிவேன்.

பாடத் திட்டங்கள்

முறையான தெய்வீக இயல்

உட் பிரிவுகள்:

1. தேவ இயல்
2. வேதாகம இயல்
3. கிறிஸ்து இயல்
4. பரிசுத்த ஆவி இயல்
5. தூதர் இயல்
6. மனித இயல்
7. பாவ இயல்
8. இரட்சிப்பு இயல்
9. சபை இயல்
10. வருங்கால இயல்

தேவ இயல்

1. தேவனின் ஆள்தன்மை
2. தேவ ஆள் தன்மையின் இயல்புகள்
3. தேவனின் இயல்பு தன்மைகள்
4. திரித்துவ தேவன் (மூவொருவர்)
5. தேவனின் படைப்பு
6. தேவனின் தொடரும் கிரியை
7. தேவனின் ஆளுகை
8. தேவ சித்தம்
9. தேவனின் தெரிந்தெடுப்பு
10. தேவனின் பராமரிப்பு

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

10. கீழ்காணும் ஒவ்வொண்றுக்கும் மதிப்பெண்கள் உண்டு என்பதை நான் அறிவேன்.

   I. Exam
   II. Home Work
   III. Attendance
   IV. Project Work/Thesis

11. விண்ணப்பப்படிவத்தில் கொடுக்கப்பட்ட அனைத்தும் உண்மையானது, எனது சொந்த அறிவினால் கொடுக்கப்பட்டது.

12. மேற்கண்ட உறுதிமொழிகளில் ஒன்றையாவது மீறுகின்ற பட்சத்தில் நான் தொடர்ந்து பங்கெடுக்க இயலாது என்பதை நன்கு அறிவேன்.

பாடத் திட்டங்கள்

முறையான தெய்வீக இயல்

உட் பிரிவுகள்:

1. தேவ இயல்
2. வேதாகம இயல்
3. கிறிஸ்து இயல்
4. பரிசுத்த ஆவி இயல்
5. தூதர் இயல்
6. மனித இயல்
7. பாவ இயல்
8. இரட்சிப்பு இயல்
9. சபை இயல்
10. வருங்கால இயல்

தேவ இயல்

1. தேவனின் ஆள்தன்மை
2. தேவ ஆள் தன்மையின் இயல்புகள்
3. தேவனின் இயல்பு தன்மைகள்
4. திரித்துவ தேவன் (மூவொருவர்)
5. தேவனின் படைப்பு
6. தேவனின் தொடரும் கிரியை
7. தேவனின் ஆளுகை
8. தேவ சித்தம்
9. தேவனின் தெரிந்தெடுப்பு
10. தேவனின் பராமரிப்பு

Immanuel Gospel Bible College

9th Main, 4th Cross, Mariyappana Palya, K.P. Agrahara Bangalore – 560023
Mobile: 9731164678, 9448016738; Email: igbc@in.com
Website: www.ImmanuelGospelMinistries.com

: 7 9 Notes No : 1

Aim:

1.
2.
3.

Objectives:

1.
2. ;
3.
4.
5.

7:10).

1. IGBC
2.
3.
4.
5.
6.
7.
8. IGBC
9. IGBC

த

தேவன் ஏன் மனிதனானார் ?

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தேவன் இவ்வுலகில் மனிதனாக அவதரித்தார் அண்ட சராசரங்களையும் மனிதனையும் தேவன் ,ஏன் மனிதனாக அவதரிக்க வேண்டும்?

முதலாவதாக, தேவன் தேவனாகவே தம்மை வெளிப்படுத்துவாரெனில் ஒருவரும் சேரக்கூடாத ஒளியிலிருக்கும் அந்தத் தேவனை, பாவங்களில் ஜிவித்து இருளின் அதிகாரத்திலிருக்கும் மனிதன் அணுகக் கூடாதவனாயிருப்பான். இடிமுழக்கத்தோடும் மின்னலோடும் எக்காள சத்தத்தோடும் தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடு பேசின போது அவர்கள் நடுங்கினார்கள் .மகிமையுள்ள தேவனோடு பேச அவர்களுக்குத் தைரியமில்லாதிருந்து. ஆனால் அன்புள்ள தேவன் மற்றெல்லா சிருஷ்டிகளைப் பார்க்கிலும் மனிதனை அதிகமாய் நேசித்து அவனைப் பாவங்களிலிருந்து விடுதலையாக்கி, பாவத்தின் பலனாக அவன் மேல் வந்த சாபங்கள், பிரச்சனைகள், வியாதிகள் யாவற்றிலிருந்தும் அவனை விடுதலையாக்க விரும்பினார். அதற்காக அவர் மனிதனை போல மாம்சமும் இரத்தமும் உடையவராக பாவமில்லாதவராய் அவதரித்தார். அவர் ஏறக்குறைய முப்பத்து மூன்றரை ஆண்டுகள் இவ்வுலகில் மனிதனாகவே, மனிதனைப் போல பசியுடையவராக, தாகம் உடையவராக, பெலவீனமுடையவராக வாழ்ந்தார் . ஆதலால் ஜனங்கள் பயமின்றி அவரோடு பழகினார்கள்,அவருடைய வார்த்தைகளைக் கேட்க மிகவும் விரும்பினார்கள். தேவனுடைய அன்பைப் பற்றியும், அவருடைய இரக்கத்தைக் குறித்து ,அவருடைய திட்டங்களைப் பற்றியும் ஜனங்கள் அறிந்து கொண்டார்கள்.

இரண்டாவதாக, மனிதன் ஜீவிப்பதற்கான மாதிரியைக் காண்பிக்கும் பொருட்டு தேவன் மனிதனானார் . மனிதன் தேவனைப் போல பூரண சற்குணம் உடையவராக வேண்டும் என்று தேவன் விரும்பினார் .ஆதலால் மாம்சமும் இரத்தமுடையவராக வெளிப்பட்ட அந்தத் தேவன், பரிசுத்தமுள்ளவராக, தாழ்மையுள்ளவராக, அன்புள்ளவராக, மற்றவர்களை மன்னிக்கிறவராக, இரக்கமுள்ளவராக இப்பாவ உலகில் ஜீவித்துக் காண்பித்தார்.

மூன்றாவதாக, மனிதனை மீட்பதற்காகத் தேவன் மனிதனானார். ஆத்துமாவிற்க்காகப் பாவநிவிர்த்திக்காக இளங்காளை, வெள்ளாடு போன்றவைகளின் இரத்தத்தைச் செலுத்திவந்தார்கள். ஆனால் அந்த இரத்தமோ மனிதனுடைய பாவத்தை மன்னிக்க முடியாது. சிருஷ்டிகளில் மேன்மையான சிருஷ்டியாகிய மனிதனை சிருஷ்டித்த சிருஷ்டி கர்த்தராகிய தம்முடைய இரத்தம்தான் மனிதனின் பாவத்தைக் கழுவவும்,மன்னிக்கவும் முடியுமென்பதை இவ்வுலகில் பாவமில்லாதவராய் அவதரித்து, மனிதனாக ஜீவித்து தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிலுவைமரத்தில் மனிதனுக்காக சிந்தி, அவனுக்காக மரணத்தை ருசிபார்த்தார். அவர் சிலுவையில் சிந்தின இரத்ததை விசுவாசித்து ,தன் பாவங்களை மனஸ்தாபத்துடன்

அறிக்கை செய்கிற எந்த மனுஷனுக்கும் பாவ மன்னிப்பையும் பாவங்களிலிருந்து விடுதலையையும் தந்து, பாவங்களின் பலனாக வந்த சாபங்கள்,வியாதிகளிலிருந்தும் அவனை விடுதலையாக்கும் பொருட்டாக அவர் அப்படியானார்.

மனிதனாக அவதரித்து ,மனிதனாக ஜீவித்து, மனிதனுக்காக முழு இரத்தமும் சிந்தி மரித்த அந்த தேவன்தான் கர்த்தராகிய இயேசு .பாவிகளை இரட்சிக்க கிறிஸ்த்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது (1தீமோ.1:15) அவரைக்குறித்து உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவாட்டுக்குட்டி என்று கூறப்பட்டுள்ளது. மனிதனுக்காக மனிதனாக அவதரித்து, மனிதனுடைய பாவங்களுக்காக மரித்த கர்த்தராகிய இயேசு, மெய்யான தேவனானபடியால் அவர் மூன்றாம் நாளில் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து, இன்றும் என்றும் ஜீவிக்கிறார்.

அன்பார்ந்த நண்பரே, அந்த அருமை இயேசுவை உம் இரட்சகரான ஏற்றுக்கொள்வீராக.கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தால் உம் பாவங்கள் நீங்க கழுவப்பட்டு, ஒரு பரிசுத்த ஜீவியம் செய்வீராகில், அவர் இருக்கும் பரலோகத்தில் நீரும் அவரோடு கூட நித்திய நித்தியமாய் வாழலாம். நித்திய மோட்ச பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பினால் பின்வரும் ஜெபத்தைச் சொல்லுங்கள்:

"கர்த்தராகிய இயேசுவே, நீர் தேவனாய் இருந்தும் பாவியான மனிஷனாகிய என்னை நேசித்து, எனக்காக மனிதனாக அவதரித்து, என் பாவங்களுக்காக மருத்து உயிர்தெழுந்தீர் என்பதை நான் விசுவாசிக்கிறேன். என் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து, எனக்கு சந்தோஷ சமாதானம் தந்து, நித்தியத்தில், மோட்ச இராஜ்யத்தில் என்னைச் சேர்த்துக் கொள்ளும் ஆமென்" .

சுகம் உங்களுடையது!

. மனிதனுக்கு ஆஸ்தி ,கல்வி, அந்தஸ்து போன்ற எல்லாம் இருந்தாலும், அவன் தன் வாழ்க்கையில் இளைப்பாறுதல் ,சந்தோஷம், சமாதானம் சுகம் ஆகியவை அற்றவனாகக் காணப்படுகிறான். சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அடைவதற்காக அவன் பல முயற்சிகளை மேற்கொள்ளுகிறாண், பணம் செலவழித்துப் பல பாவ இன்பங்களில் ஈடுபடுகிறான். எனினும் இவையெல்லாம் அவனுடைய ஆத்துமாவில் அமைதியின்மையையும், சரீரத்துல் வியாதியையும், மரணத்தை மட்டுமே கொண்டு வருகின்றன.

தேவன் மனிதனைச் சிருஷ்டித்தபோது, அவனைத் தம்முடைய சொந்த சாயலின்படியும் ரூபத்தின்படியும் சிருஷ்டித்ததுடன் ,சந்தோஷம், சமாதானம், இளைப்பாறுதல் உள்ளவனாக, ஆரோக்கியமான சரீரத்துடன், நித்திய ஜீவனையுடையவனாகச் சிருஷ்டித்தார். ஆனால் மனிதனுடைய கட்டளையை மீறிப் பாவஞ்செய்தபோது அவன் தன்னுடைய ஆசிர்வாதங்களை இழந்தது மட்டுமல்லாமல், பயம், நிராசை, மற்றும் சரீரத்தில் பெலவீனம், குணமாக்கப்பட முடியாத வியாதிகள், மரணம் இவற்றுக்கு அடிமையானான்

மருத்துவ ரீதியான சுகம், பிசாசின் ஆவிகளின் மூலம் சுகம் போன்ற பல முறைகள் கையாளப்பட்டாலும், ஒன்றும் மனிதனுக்குப் பூரண சுகத்தை அளிப்பதாகத் தெரியவில்லை. மேலும், சில மருந்துகளுக்கு சிலபக்க விளைவுகள் உள்ளன . இவை மற்றொரு வியாதிக்கு வழிவகுக்கவுங்கூடும். நவீன விஞ்ஞானம் அநேக புதிய மருந்துகளை அறிமுகப்படுத்தியிருந்தாலும், புதிய வியாதிகள் தோன்றி மருத்துவர்களுக்குங்கூட பெரும் சவால் விட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலைகளின் மத்தியில், இந்த இருபதாம் நூற்றாண்டில், என் வியாதியிலிருந்து என்னைச் சுகமாக்க ஒரு மருத்துவருமே இல்லையோ என்று சிந்தித்து நீங்கள் ஒருவேளை கலக்கமடைந்திருக்காலாம்

நண்பர்களே! நாங்கள் உங்களுக்கு ஒரு மருத்துவரை அறிமுகப்படுத்துகிறோம் நீங்கள் அவரிடம் விசுவாசத்தோடு வந்தால் போதும். அவரே மனுக்குலத்திற்க்குச் சிறந்த வைத்தியர் "இயேசு' என்னும் நாமமுள்ள அவர் "நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் " (யாத்.15:26) என்று சொல்லுகிறார். மேலும் பரிசுத்த வேதாகமம், "அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்". "அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்று கொண்டு ,நம்முடைய நோய்களை சுமந்தார்"(ஏசாயா 53:5;மத்.8:17)என்று கூறுகிறது. "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைபாறுதல் தருவேன்"(மத்,11:28) என்று அவர் நம்மை அழைக்கிறார். கர்த்தராகிய இயேசு பாவத்தையும் வியாதியையும் சாபத்தையும் மரணத்தையுங்கூட ஜெயித்து உயிர்த்தெழுந்து என்றென்றைக்கும் ஜீவிக்கிறார். அவர் தாம் பெற்ற அதே ஜெயத்தை தம்மை விசவாசிப்பவர்களுக்கு வாக்குபண்ணுகிறார்!

நீங்கள் கர்த்தராகிய இயேசுவிடம் உங்கள் பாவங்களை மனஸ்தாபத்துடன் அறிக்கை செய்து ,அவரை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டால் ,அவர் உங்கள் பாவங்களை மன்னித்து ,உங்கள் ஆத்துமாவுக்கு இளைபாறுதல் கொடுப்பதுமின்றி, உங்கள் சரீரத்திலுள்ள வியாதியை அகற்றி, பூரண சுகத்தை அளிப்பார்,. "அவர் தாமே (கர்த்தராகிய இயேசு)தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்"(1பேதுரு2:24) என்று வேதவசனம் சொல்கிறது.

கர்த்தராகிய இயேசு இப்பூமியில் ஜீவித்த நாட்களில் வியாதியஸ்தரைக் கண்டு மனதுருகினார் . அவர் பத்து குஷ்டரோகிகளைச் சுகமாக்கினார் .கர்த்தராகிய இயேசுவிடம் வந்த வியாதியஸ்தர் அனைவரும் சுகம் பெற்று திரும்பினர் ..அவர் குருடர் பார்வையடையவும், செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும் ,முடவர் நடக்கவும் செய்தார். அவர் மரித்தோரை கூட எழுப்பினார். கர்த்தராகிய இயேசு நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். இன்றுக்கூட குணமாக்கக் கூடாதபடி அவருடைய கரம் குறுகிப் போகவில்லை.

மருத்துவ விஞ்ஞானமும் அறுவை சிகிச்சை முறையும் ஒரு மனிதனுடைய சரிரத்தைச் சுகமாக்க கூடும். ஆனால் பரம வைத்தியராகிய கர்த்தராகிய இயேசுவினால் இலவசமாகக் கொடுக்கப்படுகிற தெய்வீக சுகமானது, சரீரத்தை மட்டுமல்லாது,மனது,ஆத்துமா போன்ற,மனிதனின் எல்லா அம்சங்களையும் சுகமாக்க வல்லதாயிருக்கிறது.

ஆகையால் நீங்கள் சுகமாக்கப்பட வேண்டுமாயின், உங்களுடைய வியாதி எதுவாயிருந்தாலும் பரவாயில்லை, மருத்துவர்கள் உங்களைக் கைவிட்டிருந்தாலுங்கூட கர்த்தரும் பரம வைத்தியருமான இயேசுவின் கரங்களில் உங்களை முழுமையாக ஒப்புகொடுத்து, பின்வரும் ஜெபத்தைச் சொல்லுங்கள்:

"கர்த்தராகிய இயேசுவே ,கல்வாரிச் சிலுவையில் என் பாவங்களுக்காக மட்டுமல்லாமல், என் வியாதிகளுக்காகவும் நீர் மரித்தீர் என்று நான் விசுவாசிக்கிறேன். கிருபையாக என்னுடைய பாவங்களை எல்லாம் மன்னித்து, என்னை என் வியாதியிலிருந்து விடுதலையாக்கி, எனக்குப் பூரண சுகத்தை தாரும் உம்முடைய பிள்ளையாக, ஒரு தூய்மையான ஜீவியம் செய்ய நான் ஆசிக்கிறேன் ஆமென்"

இப்போது அவர் உம்மோடு பின்வருமாறு பேசுகிறார். "உன் வின்னப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக்கண்டேன்;... நான் உன்னைக் குண்மாக்குவேன்" (11இராஜ.20:5); "துக்கப்படுகிறவர்களுக்கு ஆறுதல் அளிப்பேன்" (ஏசாயா 57:18); "இனி நீ அழுது கொண்டிராய்"; "உன் துக்கநாட்கள் முடிந்துபோம்"(ஏசாயா 57 :18)

இதை வாசிக்கும் நண்பரே! உம்மை விசாரிக்கும்படி, உம் துக்கங்களைச் சுமக்கும்படி, உம் கவலைகளைப் போக்கும்படி, உம் கண்ணீரைத் துடைக்குப்படி, உமக்கு ச

இன்னும் முடியவில்லை

வாலிபர் பகுதி

மகிழ்ச்சி மகிழ்ச்சி

அன்பான
த ம் பி
தங்கச்சி
இ ந் த
இளைஞர் பகுதி மூலம் உங்களுடன் பேசுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மகிழ்ச்சி எப்போது நம்முடைய வாழ்வில் வரும்? என்று தான் சிந்தக்க போகிறோம்.

நமது வாழ்வில் ஒரு காரியத்தில் வெற்றி (ஜெயம்) பெறும் போது மகிழ்ச்சியடைகிறோம். அப்படி என்றால் அந்த ஜெயத்தைப் பெறுவது எப்படி? வேதப் புத்தகத்தில் தானியேலின் 6–ம் அதிகாரத்தில் 28–ம் வசனத்தில் தானியேலின் காரியம் ஜெயமாக இருந்தது என்று வாசிக்கிறோம். இநத தானியேல் செய்த காரியம் தான் என்ன?

i) தானியேல் 1:8 (மு) தன் இருதயத்தில் பாவத்திற்று விலக ஒரு தீர்மானம் எடுத்துக் கொள்கிறார் தானியேல். எடுத்த தீர்மானத்திலே உறுதியாக காணப்பட்டார், நமது வாழ்வில் வருடத்தின் தொடக்க நாள் எடுத்த தீர்மானம் இந்த கடைசி மாதத்தில் எப்படியிருக்கிறது சிந்தித்துப்பார் நமது வாழ்வு ஜெயமாக, மகிழ்ச்சியாக இருக்கும்.

ii) தானியேல் 1:8பி தன் இருயத்தை தூய்மையாக வைத்துக் கொண்டார். உனது இருதயம் எப்படிப்பட்டதாக இருக்கிறது சிந்தித்து பார் மகிழ்ச்சியாக வாழலாம்.

iii) தானியேல் 6:10 தானியேல் எதையும் எதிர்பார்க்க தவறாது தன் ஆண்டவரையே நோக்கி ஜெபம் பண்ணினார், ஸ்தோத்திரமும் செலுத்தினார். உங்களது வாழ்வில் ஜெப வாழ்க்கை எப்படி இருக்கிறது. சிந்தித்து செயல்படுங்கள். எதிர்நோக்கியுள்ள புதிய ஆண்டு புதிய மகிழ்ச்சியை பெற்றுக் கொள்வோம். ஆமென். அல்லேலூயா.

சகோ. I. துரைராஜ்
திருநெல்வேலி.

தனிமையில் இருக்கும்போது. சேம் அப்பாவிடம் அப்பா! அப்பா! என தேம்பி அழுதான் அப்பா சேமை பார்த்து என் மகனே! என்றார்கள் சேம் அப்பாவிடம் அப்பா! நான் நம் வீட்டில் உள்ள வாத்தை தெரியாமல் கொன்றுவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள் என்று அழுதுகொண்டே சொன்னான். உடனே அப்பா சேம் கண்ணீரைத் துடைத்தார், அழாதே என்றார், பின்பு சேம் அமைதியாக இருந்தான். மறுநாள் அம்மா சந்தைக்கு சென்றபின் ராணி சேம் இந்த தொட்டியை சீக்கிரம் தண்ணீரால் நிரப்பு என்றாள் சேம் ராணியிடம் எனக்கு முடியாது என்றான். ராணி அதற்கு ஏ! ஏ! வாத்து என்றாள் ஆனால் சேம் நீ யாரிடம் வேண்டுமானாலும் சொல்லு என்று பயப்படாமல் கூறிவிட்டான். ஏனென்றால் சேம் தன் உண்மையெல்லாம் அப்பாவிடம் சொல்லிவிட்டான். அதனால்தான் சேம் சந்தோஷமாக இருந்தான் பாவத்திற்கு பயப்படவில்லை. அதன்பின் ராணி தம்பியை (சேம்) வேலை வாங்குவதில்லை அன்பு குழந்தைகளே சேம் தன் தந்தையிடம் மன்னிப்பு கேட்டது போல நீங்களும் இயேசப்பாவிடம் மன்னிப்பு கேளுங்கள் இயேசப்பா உங்கள் பாவங்களை உங்களுக்கு மன்னிப்பார்.

By.

Mrs. A. தங்கமணி அற்புதராஜ்

புதையலை கண்டுபிடியுங்கள்

வேதப்பகுதி. வெளிப்படுத்தல் 13 முதல் 16 வரை.

1. அறுநூற்றறுபத்தாறு – வாசிப்பதெங்கே?
2. மகா நகரம் விழுந்தது! விழுந்தது! யார் சொன்னது?
3. தேவரீர் ஒருவரே பரிசுத்தர் – வாசிப்பதெங்கே
4. நதியின் தண்ணீர் வற்றிப் போயிற்று – வாசிப்பதெங்கே
5. பூமியும் அதன் குடிகளும் வணங்கும்படி செய்தது எது?
6. எத்தனை மாதம் யுத்தம் பண்ண அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது? – வாசிப்பதெங்கே
7. ஜெயங்கொண்டவர்கள் – வாசிப்பதெங்கே
8. தேவனுக்கு பயந்து அவரை மகிமைபடுத்துங்கள் – வாசிப்பதெங்கே
9. எவை சத்தியமும் நீதியுமானவர்கள்?
10. எது முடியும் வரைக்கும் ஒருவரும் தேவாலயத்திற்குள் பிரவேசிக்க கூடாதிருந்தது?